DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : STC 125/2021

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| Name | விஜயன் |
|---|---|
| Father / Husband Name | முனுசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 12.03.2026

**முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது சென்னை கீழ்க்கட்டளையில் வசித்து வருகிறேன். 17.07.2012 ம் தேதி மாலை 4.30 மணியளவில் நானும் ஜலால் என்பவரும் 81M என்ற அரசு பேருந்தில் தாம்பரத்தில் இருந்து மதுராந்தகத்திற்கு வரும்போது கருங்குழி வசந்தம் மஹால் அருகே வரும்போது நாங்கள் வந்த அரசு பேருந்து TN 22 AR 6217 என்ற கார் வலது பக்கம் சென்ற கார் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். அந்த காரில் பயணம் செய்த இரண்டு நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. பின்னர் காயம்பட்ட நபரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். பஸ் டிரைவரை அடையாளம் தெரியுமா என்றால் விபத்து நடந்து 13 வருடம் ஆகிவிட்டதால் அடையாளம் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** விபத்து நடந்த சமயத்தில் நான் வேளச்சேரியில் குடியிருந்தேன். இந்த விபத்தில் அடிபட்ட நபர்களும் வேளச்சேரியை சேர்ந்தவர்கள் தான் என்றால் எனக்கு தெரியாது. நான் பேருந்தில் எங்கே அமர்ந்திருந்தேன் என்றால் பின்பக்கம் கடைசி இறுக்கைக்கு அருகே நின்றுக்கொண்டிருந்தேன். பேருந்தின் இறுக்கைகள் முழுவதும் நிரைந்திருந்தது என்றால் சரிதான். பேருந்தில் கூட்டம் அதிகமாக இருந்ததா என்றால் இல்லை, நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், பேருந்தில் கூட்டம் அதிகமாக இருந்ததால் தான் நான் பின்னால் நின்றுக்கொண்டிருந்தேன் என்றாலும் சரியல்ல.

3. நான் பேருந்தில் நின்றுக்கொண்டிருக்கும்போது தெற்கு நோக்கி நின்றுக்கொண்டிருந்தேன் என்றால் இல்லை. நானும் நண்பரும் பேசிக்கொண்டு வந்தோம். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், பேருந்தில் நின்றுக்கொண்டு வரும்போது ஜன்னலை பார்த்து பேசிக்கொண்டுவர முடியாது என்றாலும் சரியல்ல. பேருந்தில் கடைசி இறுக்கையின் அருகே நின்றுக்கொண்டு வரும்போது நிற்கும் நபரின் தலை ஜன்னலுக்குமேல் இருக்கும் என்றாலும், நிற்கும்

நபரால் வெளியே நடக்கும் நிகழ்வை பார்க்கமுடியாது என்றாலும் சரியல்ல. நான் பேருந்தில் டிக்கெட் எடுத்து தான் பயணம் செய்தேன்.

4. போலிசார் எவ்வளவு நேரத்தில் சம்பவயிடம் வந்தார்கள் என்றால் சுமார் 1/2 மணிநேரத்தில் வந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. வசந்தம் மஹால் அருகே உள்ள சாலை சற்று வளைவானது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றாலும், ஹரிஹரனும்,ஸ்வேதாவும் எனக்கு தெரிந்த நபர்கள் என்பதாலும், அவர்கள் வழக்கறிஞர்கள் என்பதாலும், என்னை இந்த வழக்கில் பொய்யான சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல. நானும் பட்டியல் சாட்சி 5 ம் சம்பவத்தின்போது நான் சொல்லும் பேருந்தில் பயணிக்கவேயில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு விபத்தை பொறுத்தோ விபத்து நடந்த இடத்தை பொறுத்தோ எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு பெற்றுதருவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.